# காரைதீவு மக்கள் ஒன்றியம் - கனடா

## ஒன்று கூடல் 27. 06. 2015

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் காரைதீவு மக்கள் ஒன்றாய் இணைந்து கடந்த சில ஆண்டுகளாக ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்தி, எம்மிடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்வையும் வளர்த்துவருகின்றோம். வழமைபோல் இவ்வாண்டும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோவில் அமைந்துள்ள மோர்ணிங்சைட் பூங்கா: பகுதி – 2 இல் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்வில் சிறுவர்கள், பெரியவர்களுக்கான பல்வகை விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. உங்களது பிள்ளைகள் இத்தினத்தை மிக்க மகிழ்வாகக் களிக்கும் வகையில் இவ்விளையாடடுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வளர்ந்தோருக்கான போட்டிகள் நிச்சயம் உங்களை மகிழ்வடையச் செய்யும் என்பது எமது நம்பிக்கை. பின்வரும் விளையாட்டுப் போட்டிகளும் அவற்றுக்குரிய பரிசுகளும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன:.

மிட்டாய் பைஓட்டம், மென்பந்து எறிதல், பழம் பொறுக்குதல், ஓட்டம்,
பலூன் ஊதுதல், பணிஸ் உண்ணல், முட்டி உடைத்தல், சாக்கு ஓட்டம்,
கால்கட்டி ஓடுதல், மெதுவான நடை, கயிறு இழுத்தல் என்பன...

நம் ஊரவர் - உறவினர் எல்லோரும் ஒன்றாக இருந்து, மதிய உணவு உண்டு களித்து, இந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு காரைதீவு மக்கள் எல்லோரையும் வருக வருக என காரைதீவு ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினர்களாகிய நாங்கள் உங்களை வரவேற்கிறோம்.

ஒன்றாய்க் கூடுவோம் ஒற்றுமையை வளர்த்திடுவோம்.

உறவை வளர்ப்போம் உயர்வாய் வாழ்ந்திடுமோம்.

காரைதீவு ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினர்கள்.

நன்றி வணக்கம்